**Under Section 173 BNSS"**

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C)

(கு.ந.வி.நெ. பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8101998

1. District : Ranipet PS: Vigilance & Anti Corruption Year: 2024 FIR No.: 04/2024 Date: 31/7/2024
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended by PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 19/7/2024 Date to : 19/7/2024 @ 1630 hrs to 30/7/2024 @ 12.00 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 16.30 hrs Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 31/07/2024 Time : 08.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Vol. III Time : 31.7.2024 @ 0830 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Type Written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Collectorate, Ranipet 800 mets, West
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
Beat Number : — (b) Address : O/o Special Tahsildar (L.A) Tindivanam-Nagari Railway Project Unit-2 Walajah, Collectorate Campus, Ranipet
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. Govindaraj (b) Father's/ Husband's Name : Muthusamy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address : No 41, Kuttai Theru, Sholinghur Taluk, Ranipet District.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Mathivanan, Special Tahsildar (L.A), Tindivanam-Nagari Railway Project, Unit 2, Walajah, Ranipet

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

– No Delay –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. [signature]
31-07-2024

[signature] 31/7/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
31/07/2024 @ 11.30hrs.

Name: பெயர் GNANESAN.V
Rank: நிலை Dy. Supdt of Police No. எண் ........
VE AC, Ranipet

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u> இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் V.கணேசன் ஆகிய நான் 31.07.2024 ஆம் தேதி 08.30 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, திரு.M..கோவிந்தராஜ், த/பெ முத்துசாமி, எண்.41, குட்டைத்தெரு, சோளிங்கர், சோளிங்கர் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் என்பவர் அலுவலகம் சேர்ந்து கொடுத்த புகார் மனுவை பெற்று பார்க்க, அனுப்புநர் M.கோவிந்தராஜ், த/பெ முத்துசாமி, எண்.41, குட்டைத்தெரு, சோளிங்கர், சோளிங்கர் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம். பெறுநர் Deputy Superintendent of Police, விஜிலென்ஸ் ஆபீஸ், இராணிப்பேட்டை. அய்யா, நான் இராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கரில் மேற்படி முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு இரண்டு மகன்களும், ஒரு பெண்ணும் இருக்கின்றனர். அவர்களுக்கு கல்யாணமாகிவிட்டது. நான் சோளிங்கரில் உள்ள Brakes India Foundry-ல் ஆபரேட்டராக வேலை செய்து, கடந்த 8 வருடங்களுக்கு முன்பு ஓய்வு பெற்றுவிட்டேன். எனக்கு நான்கு அண்ணன்களும், இரண்டு அக்காக்களும் ஒரு தம்பியும் உள்ளனர். என்னுடைய அப்பா முத்துசாமி அவர்களும், என்னுடைய அம்மா உண்ணாமலை அவர்களும் எங்களுடைய பூர்வீக சொத்தை எங்களுக்கு உயில் எழுதி வைத்துள்ளனர். அவர்கள் இருவரும் காலமாகிவிட்டனர். அதில் சோளிங்கர் சர்வே எண்.576/4B, 577/1A, 577/1C, 678/8-ல் மொத்தமாக 2.30 ஏக்கர் நிலத்தை என்னுடைய பெயரிலும், என்னுடைய அண்ணன்கள் எத்திராஜ் மற்றும் ஜானகிராமன் ஆகியோர்களின் பெயர்களில் உள்ளது. மேற்படி 2.30 ஏக்கர் நிலத்தில் 80 சென்ட் நிலம் எனக்கு பாத்தியப்பட்டது என உயிலில் உள்ளது. என்னுடைய அண்ணன்கள் எத்திராஜ் மற்றும் ஜானகிராமன் ஆகியோர் இப்போது உயிருடன் இல்லை. எனக்கு சொந்தமான மேற்படி 80 சென்ட் நிலத்தில் சோளிங்கர் சர்வே எண்.576/4B-ல் 1541 ச.மீட்டர் நிலம் மற்றும் சர்வே எண்.577/1C-ல் 372 ச.மீட்டர் நிலம், ஆக மொத்தம் 1913 ச.மீட்டர் நிலத்தை திண்டிவனம்-நகரி அகல இரயில் பாதை அமைக்க கடந்த 2018 ஆம் ஆண்டு நில எடுப்பு செய்யப்பட்டது. என்னுடன் நில எடுப்பு செய்யப்பட்ட நில உரிமையாளர்கள் இழப்பீட்டுத் தொகையை வாங்கிவிட்டதால் நான் என்னுடைய

பெரிய மகன் கார்த்திக்கை ஜூலை-2024 இரண்டாவது வாரத்தில் இராணிப்பேட்டை கலெக்டர் ஆபீஸில் உள்ள தனி வட்டாட்சியர் (நில எடுப்பு) அவர்களை போய் பார்த்து நில எடுப்பிற்கான பணம் வராதது குறித்து விசாரித்து வரும்படி அனுப்பி வைத்தேன். என் மகனும் போய் பார்த்து விசாரித்துவிட்டு வந்து என்னிடம் என்னுடைய ஆதார் கார்டு ஜெராக்ஸ், இரண்டு பாஸ்போர்ட் சைஸ் போட்டோக்கள், ரெவின்யூ ஸ்டாம்ப் மற்றும் அசல் உயில் ஆவணம் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு என்னை இராணிப்பேட்டை கலெக்டர் ஆபீஸிற்கு வரும்படி நில எடுப்பு தனி வட்டாட்சியர் அவர்கள் சொன்னதாக என் மகன் கார்த்திக் சொன்னார். நானும் கடந்த 19.07.2024 ஆம் தேதியன்று காலை சுமார் 11.00 மணிக்கு இராணிப்பேட்டை கலெக்டர் ஆபிஸில் திண்டிவனம்-நகரி நில எடுப்பு பிரிவு தனி வட்டாட்சியரை போய் பார்த்தேன். அப்போது அந்த ஆபீஸை சேர்ந்த காந்தி என்பவர் மூலமாக என் வாக்குமூலத்தை பதிவு செய்து கொண்டும், எனக்கு இழப்பீட்டு தொகை வழங்குவதற்கான சான்று, முன் ஒப்புதல் இரசீது ஆகிய அனைத்திலும் என்னுடைய கையெழுத்தை பெற்றுக்கொண்டு, தனி வட்டாட்சியர் மதிவாணன் அவர்களிடம் என்னை அழைத்துக்கொண்டு மேற்படி ஆவணங்களை மாலை சுமார் 04.30 மணிக்கு கொடுத்தார். தனி வட்டாட்சியர் மதிவாணன் அவற்றை வாங்கிக்கொண்டு எனக்கு இழப்பீடாக ரூ.6,27,080/- கிடைக்கும் என்றும், அதற்கு 1% பணத்தை ஆபீஸ் செலவிற்காக தர வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் இப்போது என்னிடம் பணம் இல்லை, நிலமே போயிடுச்சு, 6 ஆயிரம் ரூபாய் பணத்தை உங்களுக்கு எப்படி தருவது என்று சொன்னதற்கு, அவர் இழப்பீட்டுத்தொகையானது பேங்க்கில் உங்க அக்கௌண்ட்டிற்கு வந்தவுடன் பேங்க் ஸ்டேட்மெண்ட் நகலையும், 4,000 பணத்தை எடுத்து வந்து கொடுத்துவிட்டு உங்களுடைய அசல் உயில் ஆவணத்தை வாங்கிக்கிட்டு போங்க என்று சொன்னார். பின்னர், நான் அவரிடம் இப்போது நான் கையெழுத்து போட்ட ஆவணங்களின் நகல்களை கேட்டபோது, அந்த நகல்களையெல்லாம் தரமுடியாது, வேண்டுமென்றால் கம்ப்யூட்டரில் இருந்து பிரிண்ட் அவுட் எடுத்து தரச்சொல்கிறேன் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னார். நானும் அவர் கொடுத்த பிரிண்ட் அவுட் காப்பியை வாங்கிக்கொண்டு வந்துவிட்டேன். அன்றிரவே என்னுடைய

பேங்க் அக்கௌண்ட்டிற்கு பணம் வந்துவிட்டது. பின்னர், எனக்கு உடல்நிலை கொஞ்சம் சரியில்லாததால் என்னால் உடனடியாக போகமுடியவில்லை. அதனால் நேற்று 30.07.2024 ஆம் தேதி பகல் சுமார் 12.00 மணிக்கு தனி வட்டாட்சியர் மதிவாணன் அவர்களை, அவர் என்னிடம் கேட்ட பணம் கிரிடிட்டான பேங்க் ஸ்டேட்மெண்ட்டை எடுத்துக் கொண்டு போய் பார்த்தேன். அப்போது அவர் ஆபீஸ் செலவிற்காக நான் கேட்ட பணம் எங்கே என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் எனக்கு உடல்நிலை சரியில்லாமல் என்னுடைய சிறிய மகன் வீட்டில் சென்னையில் இருந்ததால் என்னுடைய ஏ.டி.எம். கார்டை சென்னையிலேயே விட்டு விட்டு வந்துவிட்டேன் என்று சொன்னதற்கு, பணத்தையும், பேங்க் ஸ்டேட்மெண்ட்டையும் கொடுத்துவிட்டு உங்களுடைய உயிலை வாங்கிக்கொண்டு போங்க என்று சொன்னார். நானும் நாளைக்கு வருவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு இலஞ்சமாக பணத்தை கொடுக்க விருப்பமில்லை. அரசாங்கத்தால் நில எடுப்பு செய்யப்பட்ட என்னுடைய நிலத்திற்குண்டான பணம் எனக்கு வழங்கப்பட்டும், என்னுடைய அசல் உயில் ஆவணத்தை என்னிடம் கொடுப்பதற்கு ஆபீஸ் செலவு என்ற பெயரில் இலஞ்சமாக ரூ.4,000/- யை கேட்கும் மதிவாணன், தனி வட்டாட்சியர், திண்டிவனம்-நகரி அகல இரயில்பாதை நில எடுப்பு, அலகு-2, வாலாஜா என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய புகார் மனுவுடன் தனி வட்டாட்சியர் என்னிடம் கொடுத்த கையெழுத்தில்லாத பிரிண்ட் அவுட் நகல்களையும், என்னுடைய பேங்க் ஸ்டேட்மெண்ட் நகலையும் நான் சான்றொப்பமிட்டு இணைத்து கொடுக்கிறேன். இப்படிக்கு, Sd/-xxxxxx (M.Govindaraj) 31.07.2024.

Sir,

Received the complaint on 31.07.2024 at 08.30 Hrs., after verifying the antecedents of the accused and credibility of the complainant, I have registered a case in Ranipet V&AC Cr.No.04/2024 u/s 7(a) of P.C. Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 on 31.07.2024 at 09.30 hrs. Sd/- xxxxx (V.Ganesan) 31/7/2024, Dy. Supdt. of Police, V&AC, Ranipet, Ranipet District.

The FIR in original along with the complaint and its enclosure sent to the Hon'ble CJM and Special Judge, Ranipet and other copies to the Officers concerned.

31/7/2024

Dy. Supdt. of Police
V & A.C., Ranipet,
Ranipet Dist.,